# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. NO.112/2018**
**PW10**

| | | |
|---|---|---|
| Name | : | ஸ்ரீதரன் |
| Father's/Husband's Name | : | கேசவலு நாயுடு |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.06.2025.

A1 and 2 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது தருமபுரி மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றப்பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிகிறேன். கடந்த 2016 - ம் வருடம் நான் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 28.05.2016 அன்று காலை 9.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு . கிருபானந்தன் என்பவர் கொடுத்த கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய குற்ற எண் . 170/2016 பிரிவுகள் 294 (b), 341,323,307 இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கை பெற்று என் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான நாரியமங்கலம் கிராமம் பள்ளத்தெருவில் காலை 10 மணிக்கு சென்று சாட்சிகள் ஏழுமலை த .பெ. முருகேசன், பாண்டுரங்கன் த.பெ. காசி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை

பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் . நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.12.**

சம்பவ இடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் சுமார் 12 மணியளவில் வழக்கு சொத்தான சுமார் 88 செ.மீ நீளமுள்ள சவுக்கு தடி ஒன்று மற்றும் ரத்தக்கரை படிந்த சிமெண்ட் ரோடு , கல், மண், மற்றும் ரத்தக்கரை படியாத சிமெண்ட் ரோடின் கல்லு , மண் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் 12.30 மணிக்கு கைப்பற்றினேன். அதில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன் . அதன் பின்னர் பார்வை மகசர் சாட்சிகளான ஏழுமலை மற்றும் பாண்டுரங்கன் மற்றும் சம்பவ இட சாட்சிகளான மணிமேகலை க.பெ செல்வம் , பழனி , அருண், சுந்தரபாண்டியன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன் . இவ்வழக்கில் சம்பவ இடத்ினை பார்வையிட்டதிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் என்னுடைய நேரடி விசாரணையிலிருந்தும் சம்பவம் நடந்தது உண்மை என்று தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரிகளை தேடி நாரியமங்கலம் , கார்ணாம்பூண்டி , சிறுநாத்தூர் ஆகிய பகுதிகளில் தேடிய போது ரகசிய தகவலாளி கொடுத்த தகவலின்பேரில் எதிரி பொன்னுசாமி மற்றும் எதிரி வாசுகி ஆகியோர்களை 28.05.2016 -ம் தேதி பகல் சுமர் 14.00 மணிக்கு சிறுநாத்தூர் கூட்ரோடு பஸ்ஸ்டாப்பில் கைது செய்தேன் . மேலும் சாட்சிகள் பச்சைமுத்து மற்றும் திருமலை ஆகியோர் முன்னிலையில் எதிரி பொன்னுசாமியை விசாரித்தபோது அவர் எந்தவித அச்சுறுத்தலும் , தூண்டுதலும் இல்லாமலும் தன்னிச்சையாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன் . அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்துச்சென்றால் சண்டை நடந்த இடத்தையும் தன் தம்பி செல்வத்தை அடித்த கருங்கல்லை சம்பவ இடத்தில் இருந்து ஆஜர்படுத்துவேன் என்று சொன்னதால் எதிரிகள் பொன்னுசாமி மற்றும் வாசுகி மற்றும் சாட்சிகளுடன் சம்பவ இடத்திற்கு சுமார் 15.30 மணிக்கு சென்று சம்பவ இடத்தில் இருந்து எதிரி பொன்னுசாமி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்தான கருங்கல்லை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ .சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன் . அதன் பின்னர் சாட்சிகள் பச்சைமுத்து மற்றும் திருமலை ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . பின்னர் வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் மற்றும்

வழக்கு சொத்துடன் சுமார் 16.30 மணிக்கு காவல் நிலையம் சேர்ந்து எதிரிகளை முறைப்படி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

இவ்வழக்கில் சம்பவ இ ,டத்தில் மகசரில் கைப்பற்றப்பட்ட சவுக்கு தடி மற்றும் ரத்தக்கரை படிந்த சிமெண்ட் ரோடு , கல், மண், மற்றும் ரத்தக்கரை படியாத சிமெண்ட் ரோடின் கல்லு, மண் மற்றும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலப்படி கைப்பற்றப்பட்ட கருங்கல் ஆகியவைகளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் . மேலும் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட சட்டத்திற்கு முரணான இளம் சிறார் பார்த்திபன் தலைமறைவாக உள்ளதால் நாரியமங்கலம் , சிறுநாத்தூர் மற்றும் அருகாமை கிராமங்களில் தேடியும் தக்க புலன் வைத்து நிலையம் வந்தேன் . 28.05.2016 அன்று அதிகாலை 03.28 மணிக்கு சென்னை ராஜிவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சையாக சேர்ந்து உள்நோயாளியாக சிகிச்சை பெற்று இருந்த செல்வம் என்பவர் சிகிச்சை பலனளிக்காமல் 29.05.2016 அன்று பகல் சுமார் 13.25 மணிக்கு இறந்துவிட்டதாக கிடைத்த தகவலை மாலை சுமார் 15.55 மணிக்கு பெற்றேன் . அதன்படி இவ்வழக்கின் சட்டப்பிரிவை 294 (b), 341,323,307 இதச வில் இருந்து பிரிவு 294 (b), 341,323,302 படி 29.05.2016 அன்று மாலை சுமார் 16.30 மணிக்கு பிரிவு மாற்றம் அறிக்கை தயார் செய்தேன் . அந்த பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ. 13.** அந்தபிரிவு மாற்று அறிக்கையினை துரித தபாலின் மூலம் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு . கோவிந்தசாமி மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் . இவ்வழக்கில் இறந்துபோன செல்வம் என்பவரின் பிரேதம் மீது பிரேத விசாரணை செய்யவேண்டி 30.05.2016 அன்று ராஜீவ் காந்தி மருத்துவமனை சவக்கிடங்கில் இருந்த செல்வம் என்பவரின் உடல் மீது காலை 8.00 மணி முதல் 10. மணி வரை பஞ்சாயத்தார்கள் கதிர்வேல், குமார் , இளங்கோ, ஏழுமலை மற்றும் சிலர் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ.14.** அதன் பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான மணிமேகலை , ஏழுமலை , பழனி , அருண் சுந்தரபாண்டியன், பச்சைமுத்து ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். மற்ற சாட்சிகளான மாசிலாமணி, மல்லிகா, சுசீலா, பிரபு ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின் செல்வத்தின் இறப்பின் உண்மையான காரணத்தை அறியும் பபொருட்டு பிரேதத்தை உடற்கூறு ஆய்வு செய்ய வேண்டுகோள் கடிதம் தயார் செய்து சிறப்பு உதவி ஆய்வாளர் மகேந்திரன் என்பவரின் மூலம் கொடுத்து

அனுப்பினேன். பிரேத பரிசோதனைக்கு பிறகு பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்புவித்தேன்.

பிரேத கூராய்வின்போது சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை ரசாயன பகுப்பாய்விற்கு ஒப்படைத்தும் , பிரேதத்தின் மீது இருந்த ஆடைகளை தனியறிக்கையுடன் நிலையத்தில் வந்து ஒப்படைக்குமாறு அறிவுரை வழங்கி நான் நிலையம் வந்தேன். இந்த வழக்கு விசாரணையில் தயாரிக்கப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் . 01.06.2016 அன்று நான் காவல் நிலையத்தில் இருந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் மகேந்ததிரன் தனியறிக்கையுடன் ஆஜர் செய்த செல்வத்தின் உடல் மீது காணப்பட்ட கருப்பு வெள்ளை ரோஸ் கலர் கட்டம் போட்ட லுங்கி ஒன்று , சிவப்பு அரைஞாண் கயிறு ஒன்று , கருப்பு அரைஞாண் கயிறு ஒன்று ஆகியவைகளை படிவம் - 91 மூலம் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் லுங்கிதான் அது . அது **அ.சா.பொ. 5.** தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சிவப்பு நிறஅரைஞாண் கயிறு **அ.சா.பொ. 6.** தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கருப்பு நிற அரைஞாண் கயிறு **அ.சா.பொ. 7.** வழக்கு சொத்துகளையும் விரைந்து ரசாயன பகுப்பாய்வு செய்து தருமாறு நீதிமன்றத்திற்கு கடிதம் அனுப்பிவைத்தேன் . அதன்பின்னர் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட சட்டத்திற்கு முரண்பட்ட தலைமறைவாக இருந்த இளம்சிறார் பார்த்திபனை 22.06.2016 அன்று திருவண்ணாமலை இளஞ்சிறார் நீதிக்குழுமத்தில் தன்னிச்சையாக ஆஜர் ஆனவருக்கு 17 வயதுதான் ஆகிறது எனவும் , மேற்படி இளஞ்சிறாரை முதன்மை நீதிமன்ற நடுவரின் உத்தரவுப்படி கையகப்படுத்தி அந்த நபரை கடலூர் இளஞ்சிறார் இல்லத்தில் காவலர் மூலம் ஒப்புவித்தேன் . இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட இளஞ்சிறாரை சைகலாஜிக்கல் மற்றும் பரிசோதனை செய்து அவர்களை 18 வயது பூர்த்திஅடைந்த எதிரிகளுடன் சேர்ந்து விசாரணை செய்ய இளஞ்சிறார் நீதிக்குழுமத்தில் மனு தாக்கல் செய்தேன் . ஆனால் அந்த மனு நிராகரிக்கப்பட்டது . 09.08.2016 அன்று திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மரு. அருண், உதவி மருத்துவரை சந்தித்து 27.05.2016 அன்று செல்வத்திற்கு சிகிச்சை அளித்ததுபற்றி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . பின்னர் 16.08.2016 அன்று வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் சென்று ஆய்வக அதிகாரி திரு. ஜேம்ஸ் அந்தோனிராஜ் அவர்களை சந்தித்து இவ்வழக்கில் நஞ்சியல்

ஆய்வறிக்கை கொடுத்தது சம்மந்தமாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . வேலூர் தயட அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட உயிரியல் அறிக்கை **அ.சா.ஆ.15.** வேலூர் தயட அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட குருதி வடிநீரியல் அறிக்கை **அ.சா.ஆ.16.** பின்னர் 18.06.2016 அன்று சென்னை ராஜிவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு சென்று மரு . செந்தில் குமாரை சந்தித்து இவ்வழக்கில் 29.05.2016 ம் தேதி பகல் சுமார் 1.25 மணிக்கு சிகிச்சையில் இருந்து இறந்துபோன செல்வம் என்பவரின் இறப்பு தகவல் பதிவு பற்றி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . பின்னர் அதே மருத்துவமனையில் சாட்சி மரு . நரேந்தர் , உதவி பேராசியர் அவர்களை சந்தித்து இறந்துபோன செல்வம் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன் . 23.08.2016 அன்று சிறப்பு உதவி ஆய்வாளர் மகேந்திரன் மற்றும் உதவி ஆய்வாளர் திரு. கிருபானந்தன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . இத்துடன் என் விசாரணையை முடித்து 23.08.2016 அன்று இவ்வழக்கின் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தயார்செய்து , நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் . இளஞ்சறார்கள் சம்மந்தப்பட்ட அறிக்கைகளை இளஞ்சிறார் நீதிக்குழுமத்தில் தாக்கல் செய்தேன் . அ.சா. 2 பாண்டுரங்கன் நான் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது சம்மந்தமாக என்னிடம் வாக்குமூலம் கொடுத்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட இளஞ்சிறார் சம்மந்தமாக நான் தாக்கல் செய்த இறுதி அறிக்கை மீது விசாரணை நடத்திய திருவண்ணாமலை இளஞ்சிறார் நீதிக்குழுமம் JC No. 01/2017 என்ற வழக்கில் இளஞ்சிறாரை 10.06.2024 அன்று விடுவித்து தீர்ப்பளித்தது என்றால் சரிதான். நான் 2 ம்எதிரி வாசுகியை கைது செய்தபோது அவருக்கு இடது பக்க தலையில் காயம் இருந்ததை நான் தயார் செய்த கைது குறிப்பாணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் . 2 ம் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியபோது அவரை பரிசோதனை செய்த நீதித்துறை நடுவர் அவர் நெற்றியில் ஒரு காயம் இருந்ததையும் , அது அவர் கொழுந்தனார் ஏற்படுத்தினார் என்று சொன்னதாக அடைப்பு உத்தரவில் எழுதியுள்ளார் என்றால் சரிதான். 2 ம் எதிரிக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்பது சம்மந்தமாக மருத்துவ ஆவணங்கள் எதுவும் கைப்பற்றினீரா என்றால் கைப்பற்றவில்லை . மரு. செந்தில் குமாரிடம் செல்வத்திற்கு சிகிச்சை அளித்ததற்கான ஆவணங்கள் ஏதாவது

கைப்பற்றினேனா என்றால் கைப்பற்றவில்லை. செல்வம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அவர் இறக்கும்வரை சுயநினைவின்றி இருந்தார் என்றால் சரிதான். 28.05.2016 அன்று முதல் அவர் இறக்கும்வரை சென்னை ராஜிவ்காந்தி மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் செல்லவில்லை. 09.06.2016 அன்று பெறப்பட்ட தடய அறிவியல் அறிக்கையில் இறந்த செல்வத்தின் உடல் உள்ளுறுப்புகளில் சாராயம் இருந்ததாக அளவுக்கோலுடன் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 மணிமேகலை என்னிடம் அளித்த வாக்குமூலத்திலும், மறுவாக்குமூலத்திலும் எதிரிகள் அவர் கணவரை பலமுறை அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 தனது வாக்குமூலத்திலும், மறுவாக்குமூலத்திலும் இளஞ்சிறார் இடது கன்னத்தில் தடியால் ஒரு அடியும், பொன்னுசாமி கருங்கல்லால் இரண்டு முறை அவரது கணவரின் தலையில் தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1ன் வாக்குமூலப்படி இறந்த நபருக்கு 3 காயங்கள் மட்டுமே இருந்திருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரியல்ல. அ.சா.1ன் மறுவாக்குமூலத்தில் பார்த்திபன் என்பவர் அவரது கணவரின் வலது கன்னத்தில் தடியால் அடித்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன் எந்த தேதியில் எதிரிகள் அ.சா.1ன் கணவரை உன்னை கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். "அடிக்கடி" சண்டை ஏற்படும் அவ்வாறு சொல்வார்கள் என்று அ.சா.1 சொன்னார். அவ்வாறு ஏற்பட்ட சண்டை சம்மந்தமாகவோ அல்லது மிரட்டியது சம்மந்தமாகவோ, காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவோ, பஞ்சாயத்து செய்தது பற்றியோ விசாரணையில் தெரியவந்ததாக என்றால் புகார் எதுவும் கொடுக்கவில்லை. ஆனால் பஞ்சாயத்து ஏற்பட்டது என்று தெரியவந்தது. இந்த சம்பவம் சொத்து தகராறு அடிப்படையில்தான் ஏற்பட்டது அல்ல என்றால் சரியல்ல.. அ.சா.4 அருண்சுந்தரபாண்டியன் மற்றும் அவரது சகோதரர் மாசிலாமணி தங்கள் வாக்குமூலத்தில் காயம் பட்டவரை அழைத்துக்கொண்டு திருவண்ணாமலை மருத்துவமனைக்கோ, சென்னை மருத்துவமனைக்கோ அழைத்துச்சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சென்னை மருத்துவமனையில் சென்று பார்த்ததாக மட்டுமே கூறியுள்ளார் என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் புகார் வாக்குமூலத்தை அ.சா.1 மணிமேகலைதான் எழுதினார் என்று தெரியவந்தது. மேற்படி புகார் எங்கள் காவல் நிலையத்திற்கு வெளியே எப்போதும் இருக்கும் ஜெகந்நாதன் என்ற ஒரு நபர் எழுதியது என்று சொன்னால் அதை நான்

மறுக்கிறேன். இந்த புகாரானது அ.சா.1 மணிமேகலையால் எழுதப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்திற்கு அருகிலேயே பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் இல்லை . காவல் நிலையத்தில் இருந்து காவலர் குடியிருப்பு சுமார் 200 அடி தூரத்தில் உள்ளது . காவலர் குடியிருப்பில் இருந்து பேருந்து நிறுத்தம் எவ்வளவு தூரம் உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை . கீழ்பென்னாத்தூரில் இருந்து திருவண்ணாமலையில் உள்ள நீதிபதிகள் குடியிருப்பு சுமார் 17 கி.மீ தூரத்தில் உள்ளது . முதல் தகவல் அறிக்கை 28.05.2016 அன்று காலை 9.00 மணியளவில் பதிவு செய்யப்பட்டு அன்று இரவு 8.15 மணிக்கு அவர் குடியிருப்பில் பெற்றுள்ளார் என்றால் சரிதான் . இந்த வழக்கை எங்களுக்கு ஏற்றவாறு கொண்டுசெல்லதான் இந்த காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல . சவுக்கு தடியில் ரத்தக்கரை இருந்ததாக தடய ஆய்வக அறிக்கையில் காணப்படவில்லை என்றால் சரிதான் . இறந்த செல்வம் எப்போதும் குடிபோதையில் இருப்பவர் என்றும் , 27.05.2016 அன்று சம்பவத்திற்கு முன்பாக பல்வேறு இடங்களில் வேறுவகையில் ஏற்பட்ட காயங்களுடன் வந்து 2ம் எதிரியை தாக்கியுள்ளார் என்றும் , அதை பார்த்த இளஞ்சிறார் தடுக்க முயன்றபோது குடிபோதையில் இருந்த செல்வம் அங்கிருந்த கற்கள் இருந்த பகுதியில் விழுந்து காயம் ஏற்பட்டு மயங்கி விழுந்தார் என்றால் சரியல்ல . 1ம் எதிரியானவர் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல . இறந்த செல்வம் தாக்கியதால் 2ம் எதிரிக்கு காயம் ஏற்பட்ட தகவல் திருவண்ணாமலையில் 1-ம் எதிரிக்கு தெரிந்து அவரை மருத்துவமனைக்கு வரும்படி கூறி அவரை மருத்துவமனையில் சேர்த்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல . நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில்எதிரிகளை கைது செய்யவில்லை என்றும் , கருங்கல்லை கைப்பற்றவில்லை என்று சொல்வது வழக்கினை வலுசேர்க்கும் நோக்கில் சொல்லப்படும் பொய்யான சங்கதிகள் என்று சொன்னால் சரியல்ல . 27.05.2016 அன்று இரவு அரசு மருத்துவமனையில் அ .சா.1 மணிமேகலை என்பவரிடம் பெறப்பட்ட புகாரானது இந்த வழக்கில் மறைக்கப்பட்டு பொய்யான புகார் ஒன்று மறுநாள் வழக்கினை வலுப்படுத்தும் நோக்கில் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல . அ.சா.1 மணிமேகலை காயம்பட்ட செல்வத்தை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதால் அவர் ஆடைகளில் இறந்த நபரின் ரத்தம் இருந்ததா என்பதை அறிய அவரது ஆடைகள் கைப்பற்றப்பட்டதா என்றால் கைப்பற்றவில்லை. சரியான வகையில் இந்த வழக்கை நான் புலன் விசாரணை

செய்யாமல் ஆவணங்களை தயார் செய்து எதிரியின் மீது தவறான இறுதி குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . இறந்த நபருக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.